## நுண்கடன் திட்டங்களின் பொறியில் சிக்கியுள்ளவர்களுக்கு நீதி வழங்குவதற்கு மக்களிடமிருந்தான முன்மொழிவுகள்

இலங்கையின் பல பாகங்களிலும் நுண்கடன் திட்டங்களினால் பாதிக்கப்பட்டுள்ள சகல பெண்களையும் அவர்களின் நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி அநீதி இழைக்கப்பட்டு உள்ளவர்களுக்கு நீதி வழங்குவதற்காக பின்வரும் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

**உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டிய முன்மொழிவுகள்:**

1. சகல கடன்களையும் தள்ளுபடி செய்தல் - நுண்கடன் திட்டத்தினால் உருவாக்கப்பட்டுள்ள இந்நெருக்கடிக்கான பிரதான காரணம் நுண்கடன் கம்பனிகளினால் அதீத வட்டிக்கு, திட்டமிடப்படாத முறையிலும் ஒழுங்கமைக்கப்படாத வகையிலும் கடன் வழங்கப்பட்டமையாகும். எனவே அங்கீகரிக்கப்படாத அடிப்படைத் தராதரங்களுக்கு இயைபுறாமல் அரசாங்கத்தினால் குறித்துரைக்கப்பட்ட வட்டி வீதத்தில் அல்லாது அதீத வட்டிக்கு விநியோகிக்கப்பட்ட சகல கடன்களும் பதிவழிக்கப்படல் வேண்டும்.
2. கடன்கள் தள்ளுபடி செய்வதை கம்பனிகளுக்கு வழங்கும் சலுகையாக கருதமுடியாது - முறையற்ற வழிகளால் நுண்கடன் கம்பனிகள் ஏற்கனவே பெரும் செல்வத்தினைச் சேர்த்துள்ள காரணத்தினால் மக்களோ அல்லது அரசாங்கமோ இந்த அநியாயமான கடன்களையும் வட்டியினையும் வழங்கவேண்டிய பொறுப்பற்றவர்களாக இருக்கின்றனர். இக்கடன்களைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் பொதுமக்களின் வரிப்பணத்தினை செலவழிக்க வேண்டியதில்லை.
3. அரச அனுசரணையுடன் நிதி உதவிகள் வழங்கள் - கிராமியப் பொருளாதாரம் நலிவடைந்து வருகின்ற காரணத்தினால் பெண்கள் தமது வாழ்வாதாரத்தினை இழந்து வருகின்றனர். இப்பெண்கள் தமது நாளாந்த செலவுகளைச் சமாளிப்பதற்காக பாதுகாப்பற்றதும் உயர் வட்டிக்கு வழங்கப்படுகின்றதுமான கடன்களை நுண்கடன் கம்பனிகளிடமிருந்து பெற்று இந்நெருக்கடி நிலைக்கு ஆளாகியிருக்கின்றனர். குறுகிய காலத்தில் வாழ்க்கைச் செலவின் சுமையினைத் தளர்த்துவதற்காக இப்பெண்களுக்கு சலுகை அடிப்படையிலான கடன்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படுவது அவசியமாகும். இல்லாவிடின் அதீத வட்டிக்குக் கடன் வழங்கும் இந்நுண்கடன் முதலைகளிடமிருந்து மேலும் மேலும் கடன் பெற்று இப்பெண்கள் மீளமுடியாத குழிக்குள் விழுந்துவிடுவர்.
4. அரச நிதி சேவைகளின் சமூகம்சார் செயற்பாடுகளை சக்திப்படுத்தல் - அரச நிதி நிறுவனங்கள் ஊடாக குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு தேவையான நிதி சேவைகளை பெற்றுக்கொள்ளக் கூடியவாறு அரச வங்கிகளின் சமுதாய பொறுப்பை சக்திப்படுத்தல். இதுவரையில் மக்களின் சேமிப்பு தேங்கி கிடக்கும் சமுர்த்தி, சணச மற்றும் கிராம வங்கி உற்பட ஏனைய வங்கிகளில் மக்களுக்கு கடன் பெறுவதில் உள்ள தடைகளையும் கட்டுப்பாடுளையும் நீக்குதல்.

5. <u>நுண்கடன் நிறுவனங்களுக்கான நியதிச்சட்டங்களை உறுவாக்குதல்</u> - இலாபத்தினை ஈட்டும் நோக்கத்துடன் நுண்கடன் வடிவில் கடன் வழங்கும் சகல நுண்கடன் கம்பனிகளும் பதிவு செய்யப்படுவது கட்டாயமாக்கப்படல் வேண்டும் என்பதுடன் வட்டி வீதத்தினை ஒழுங்குபடுத்தி நுண்கடன் கம்பனிகளின் செயற்பாட்டினை ஒழுங்கமைக்கும் அதிகாரத்தினைக் கொண்ட நியதிச்சட்ட நிறுவனங்கள் நிறுவப்படல் வேண்டும் என்பதுடன் இந்நிறுவனங்கள் இவ்வாறான கம்பனிகளுக்கு எதிரான முறைப்பாட்டினைப் பெற்று அம்முறைப்பாடுகளை விசாரித்து அக்கம்பனிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை எடுக்கப்படல் வேண்டும். உரிய ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு இயக்கத்திற்கு வரும் வரையில் நுண்கடன் கம்பனிகளின் இயக்கம் இடைநிறுத்தி வைக்கப்படல் வேண்டும்.
6. <u>கடன் பெறும் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அரச நிறுவனம் ஒன்றை நிறுவுதல்</u> - கடன்களை அறவிடுவதற்காக நுண்கடன் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் சகல வகையான தொந்தரவுகள் உடனடியாக நிறுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் மக்கள் தமது முறைப்பாட்டினை மேற்கொள்வதற்கும் அவ்வாறான முறைப்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் கிராம மட்டத்தில் அரசாங்கப் பொறிமுறை ஒன்று நிறுவப்படல் வேண்டும். நுண்கடன் கம்பனிகளால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு உதவுவதற்காக சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவேண்டும்.
7. <u>நுண்கடனால் பாதிக்கப்பட்டவர்களை கறுப்பு பட்டியலில் இருந்து நீக்குதல்</u> - கடன்கள் பதிவழிக்கப்பட்டதும், கடன் தகவல் பணியகத்தின் கறுப்புப் பட்டியலில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர்கள் அகற்றப்படல் வேண்டும் என்பதுடன் எதிர்காலத்தில் நுண்கடனினைச் செலுத்த முடியாத எவரின் பெயரும் கறுப்புப் பட்டியலில் பதியப்படக்கூடாது எனும் கொள்கைத் தீர்மானம் எடுக்கப்படல் வேண்டும்.

**நீண்ட கால முன்மொழிவுகள்:**

1. <u>40 வருடகால பொருளாதார கொள்கையின் பாதிப்புகளை மாற்றியமைத்தல்</u> - கிராமியப் பொருளாதாரத்தின் வீழ்ச்சியே கிராமியச் சமுதாயங்கள் கடன்படும் நிலைக்கான பிரதான காரணமாகும். கிராமியக் கடன்படுநிலையின் மிகமுக்கியமான கூறு நுண்கடனாகும். கடந்த 40 வருடங்களாக நாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொருளாதாரக் கொள்கைகளின் விளைவே இதுவாகும். எனவே கிராமியப் பொருளாதாரத்தைத் தூக்கிநிறுத்தி, கிராமியச் சமுதாயங்களின் உரிமைகளைப் பாதுகாக்க சேவையாற்றுவதோடு, கிராமிய மக்களின் வாழ்வாதாரங்களை தரமுயர்த்தும் பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்தப்படல் வேண்டும்.
2. <u>சிறு உற்பத்தியாளர்களை பாதுகாத்தல்</u> - கிராமியப் பொருளாதாரத்தின் அத்திவாரமான சிறு அளவிலான விவசாயம், கடற்றொழில், குடிசைக் கைத்தொழில் போன்ற துறைகளில் முதலீட்டினை அதிகரிப்பதன் மூலம் கிராமியச் சமுதாயங்களின்

(குறிப்பாகப் பெண்கள்) வாழ்வாதாரங்கள் தரமுயர்த்தப்படல் வேண்டும். இவை நீண்ட காலத்தில் கிராமிய வறுமையினை இல்லாதொழித்து பெண்களின் கடன்படுநிலையினையும் இல்லாதொழிக்கும்.

3. <u>பெண்கள் கூட்டுறவு சங்கத்தை உருவாக்கள்</u> - அரச வங்கிகளின் ஒத்துழைப்புடன் பெண்களின் சங்கங்களின் மூலமாகக் கிராமியப் பெண்களின் கடன் தேவைகளை நிறைவேற்றக்கூடிய குறைந்த வட்டியிலான சலுகைக் கடன் திட்டம் அமுல்படுத்தப்படல் வேண்டும். திட்டமிடல் மற்றும் தீர்மானம் வகுத்தல் கட்டமைப்புக்களில் பெண்களின் பங்கேற்பு உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும். அதேவேளை இலாபங்களை மீண்டுச் சமுதாயத்தினுள் முதலீடு செய்யும் ஒரு முறைமை உருவாக்கப்படல் வேண்டும். மேலும் சிறு அளவிலான உற்பத்தியாளர்கள் மற்றும் பெண்களுக்கான சலுகைக்கடன் திட்டங்கள் அரச வங்கிகளின் மூலம் வடிவமைக்கப்படல் வேண்டும்.
4. <u>தனிப்பட்ட முயற்சிகளுக்கு பதிலாக சமுதாயம்சார் முயற்சி</u> - சமுதாயத்தின் கூட்டுப் பொருளாதாரச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட நன்கு திட்டமிடப்பட்ட கிராமியப் பொருளாதார மறுமலர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்குதல். தனிநபர்கள் எடுத்த கடன்களைத் தேடாமல் அதற்கு பதிலாக அங்கீகாரங்களைத் தேடும் கூட்டு முயற்சிகளை உருவாக்குவதற்கான மூலங்கள் வடிவமைக்கப்படல் வேண்டும்.
5. <u>பொதுச் சொத்து தொடர்பில் உள்ள உரிமைகளை பாதுகாத்தல்</u> - காணி, விதைகள், நீர், கரையோர வலயங்கள் மற்றும் வனங்கள் போன்ற பெண்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பினையும் சந்தை அணுகலையும் உறுதிப்படுத்த அவசியமான இயற்கை வளங்களின் உரித்தாண்மை ஒருங்கிணைக்கப்படல் வேண்டும்.
6. <u>அத்தியவசிய தேவைகளை அடிப்படை உரிமைகளாக உறுதிப்படுத்தல்</u> - மக்களின் அடிப்படை உரிமைகளாக இருக்கும் சுகாதாரம், கல்வி மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் அடிப்படை உரிமைகளாக அரசியலமைப்பில் பொதியப்படல் வேண்டும் என்பதுடன் இத்துறைகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் அதிகரிக்கப்படல் வேண்டும்.
7. <u>சமுதாய பாதுகாப்பு திட்டங்கள் சுவாதினமானதாகவும் நீண்டகால அடிப்படையிலும் செயற்படுத்தல்</u> - சமுதாயத்தின் மற்று வறிய மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி சேவையாற்ற வேண்டிய சமுர்த்தி போன்ற சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களும் கிராமசக்தி போன்ற கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய விதத்தில் அரசியல் தலையீடுகள் இன்றி அமுல்படுத்தப்படல் வேண்டும். வறுமையை ஒழிப்பதற்கான இந்நிகழ்ச்சித் திட்டங்களின் தரமுயர்த்தல் செயற்பாட்டின் சாத்தியவளம் பற்றிய பொருத்தமான ஆய்வு மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**நுண்கடனினால் பாதிக்கப்பட்ட பெண்களின் ஒருங்கிணைப்பு**

57, முதலாம் ஒழுங்கை, மடவெலிகடை வீதி, ராஜகிரிய – தொ.எண் - 076 656 8663, 077288 822